# 2027 ஆம் ஆண்டு ஹஜ் யாத்திரைக்கான (1448H) உத்தியோகபூர்வ கால அட்டவணை மற்றும் நடைமுறை

முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம், 2027 ஆம் ஆண்டிற்கான ஹஜ் யாத்திரை (1448H) தொடர்பாக சவுதி அரேபியாவின் ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சு வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ செயற்பாட்டு கால அட்டவணையை ஹஜ் யாத்திரையை மேற்கொள்ள விரும்பும் யாத்திரிகர்கள், ஹஜ் முகவர்கள் மற்றும் தொடர்புடைய அனைத்து பங்குதாரர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதுடன், அனைத்து தரப்பினரும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கால அட்டவணை மற்றும் நடைமுறைகளை கட்டாயமாகவும் முறையாகவும் பின்பற்றுமாறும் கேட்டுக்கொள்கின்றது.

| | |
|---|---|
| **30 ஜுன் 2026**<br>(15 முஹர்ரம் 1448H) | • நுசுக் மஸார் தளத்தில் மக்கா மற்றும் மதினா தங்குமிடங்களுக்கான ஆரம்பகட்ட விருப்பத்தேர்வு (Preliminary preference) பதிவு செய்தல் ஆரம்பம். |
| **15 ஜுலை 2026**<br>(1 ஸ.்.பர் 1448H) | • நுசுக் மஸார் தளத்தில் உள்ள e-wallet இற்கு நேரடியாக நிதி பரிமாற்றம் செய்தல் ஆரம்பம்.<br>குறிப்பு: முகாம் (Camp), சேவை வழங்குநர் (Service Provider) மற்றும் பிற வசதிகளை முன்பதிவு செய்வதற்காக, ஒவ்வொரு ஹஜ் பயணியின் ஹஜ் கட்டணத்தின் ஏரத்தாள மூன்றில் ஒரு பகுதி சவூதி அரேபியாவிற்கு நிதி பரிமாற்றம் செய்யப்பட வேண்டும். |
| **29 ஜுலை 2026**<br>(15 ஸ.்.பர் 1448H) | • **முகாம்களைத் முன்பதிவு செய்யும் காலப்பகுதி ஆரம்பம்:** சவூதி சேவை வழங்குநருடன் முன்கூட்டியே ஒப்பந்தம் செய்வதன் மூலம், கடந்த ஹஜ்ஜில் முன்பதிவு செய்யப்பட்ட முகாம்களைத் தக்கவைப்பதை உறுதி செய்யும் காலப்பகுதி ஆரம்பம்.<br>• **முழுமையான சேவை ஒப்பந்தம் (Comprehensive package contracting) ஆரம்பம்:** இலங்கை ஹஜ் விவகார அலுவலகத்தால் (Sri Lanka Hajj Affairs Office) மேற்கொள்ளப்படும்.<br>• **விமான நிறுவனங்களுடனான ஒப்பந்த ஆவணங்கள் ஆரம்பம்:** ஹஜ் பயணிகள் பயணத்திற்காக நுசுக் மஸார் தளத்தில் மேற்கொள்ளப்படும்.<br>• **Nusuk Card விநியோகத்திற்கான விருப்பத்தேர்வு ஆரம்பம்:** பயணியின் சொந்த நாட்டில் இது ஆரம்பிக்கப்படும்.<br>• **தங்குமிட விருப்பத்தேர்வு பதிவு நிறைவு:** மக்கா மற்றும் மதினா தங்குமிட விருப்பத்தேர்வு (மாவட்டம், தங்குமிட வகை மற்றும் நட்சத்திர மதிப்பீடு - Star Rating) முடிவு. |
| **13 ஆகஸ்ட் 2026**<br>(30 ஸ.்.பர் 1448H) | • சவூதி சேவை வழங்குநர் நிறுவனத்துடனான முன்கூட்டிய ஒப்பந்தம் மூலம் முகாம்களைத் தக்கவைப்பதை உறுதி செய்யும் காலப்பகுதி முடிவு.<br>• புதிய ஹஜ் சுற்றுலா முகவர்களை (Hajj Travel Operators) பதிவு செய்வதட்கான இறுதித் திகதி. |

| | |
|---|---|
| **14 ஆகஸ்ட் 2026**<br>(1 ரபியுல் அவ்வல் 1448H) | • ஹஜ் பயணிகள் மற்றும் தூதுக்குழு உறுப்பினர்களின் தரவுகளை நுசுக் மஸார் தளத்தில் பதிவேற்றுதல் ஆரம்பம்.<br>• மருத்துவ மற்றும் ஊடக தயாரிப்பு சேவை வழங்குநர்களுடன் (Medical and Media Production Service providers) நுசுக் மஸார் தளம் வழியாக ஒப்பந்தம் செய்யல் ஆரம்பம்.<br>• ஹஜ் பயணிகளின் போக்குவரத்து விருப்பத்தேர்வுகளை (Movement preferences) நுசுக் மஸார் தளம் வழியாக பதிவு செய்யல் ஆரம்பம்.<br>• ஹஜ் 2027 (1448H) இற்கான வணிகத் திட்டத்தை (Business plan) சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி. |
| **26 செப்டம்பர் 2026**<br>(15 ரபியுல் தானி 1448H) | • ஹஜ் பயணியின் சொந்த நாட்டில் ஹஜ் பதிவை அறிவிப்பதற்கான இறுதித் திகதி.<br>• நுசுக் மஸார் தளம் வழியாக விமான சேவை நிறுவனங்களை ஒதுக்குதல் மற்றும் விமான செவை நிறுவனங்கள் மற்றும் வான்வழி நுழைவுப் புள்ளிகளுக்கான இடஒதுக்கீட்டை (Quotas) வழங்குவதற்கான இறுதித் திகதி.<br>• நுசுக் மஸார் தளம் வழியாக மருத்துவ சேவை வழங்குநர்கள் மற்றும் ஊடக தயாரிப்பு சேவை வழங்குநர்களுடன் ஒப்பந்தம் செய்வதற்கான இறுதித் திகதி.<br>• ஹஜ் விவகார அலுவலக உறுப்பினர்களின் தரவுப் பதிவேற்றம் முடிவு. |
| **8 நவம்பர் 2026**<br>(28 ஜுமாதல் அவ்வல் 1448H) | • 2027 ஆம் ஆண்டின் ஹஜ் மாநாடு மற்றும் கண்காட்சியின் ஒரு அங்கமாக ஹஜ் விவகார ஏற்பாடுகள் ஒப்பந்தத்தில் (Hajj Affairs Arrangements Agreement) கையெழுத்திடுதல்.<br>• ஹஜ் பயணிகளின் போக்குவரத்து விருப்பத்தேர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடுதல். |
| **24 டிசம்பர் 2026**<br>(15 ரஜப் 1448H) | • முழுமையான சேவை தொகுப்பு (Comprehensive packages) ஒப்பந்தங்களுக்குத் தேவையான நிதியை பரிமாற்றுவதற்கான காலம் நிறைவடைதல், மற்றும் நுசுக் மஸார் தளம் வழியாக e-wallets இல் அவற்றை வைப்பு செய்தல் நிறைவடைதல். |
| **23 ஜனவரி 2027**<br>(15 ஷஃபான் 1448H) | • நுசுக் மஸார் தளம் வழியாக முழுமையான சேவை தொகுப்பு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கான இறுதித் திகதி. |
| **28 ஜனவரி 2027**<br>(20 ஷஃபான் 1448H) | • நுசுக் மஸார் தளத்தில் பயணிகளின் தரவுகளைப் பதிவேற்றுவதற்கான இறுதித் திகதி.<br>• ஹஜ் விவகார அலுவலக உறுப்பினர்களுக்கான கட்டாய பயிற்சி வகுப்புகளை முடித்து, தொழில்முறை தகுதிச் சான்றிதழைப் (Professional Qualification Certificate) பெறுவதற்கான இறுதித் திகதி.<br>• விசா (Visa) விநியோகம் ஆரம்பம். |

| | |
|---|---|
| **9 மார்ச் 2027**<br>(1 ஷவ்வால் 1448H) | • விசா விநியோகத்திற்கான இறுதித் திகதி.<br>• நுசுக் மஸார் தளம் வழியாக மருந்து அனுமதி கோரிக்கைகளை (Medication clearance requests) பெற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி. |
| **8 ஏப்ரல் 2027**<br>(1 துல்க.்.தா 1448H) | • விசா ரத்துக் கோரிக்கைகளை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி (இதற்கான முறையான காரணம் மற்றும் விசா ரத்து செய்யப்பட்ட பயணி ஹஜ் இற்காக வருகை தரமாட்டார் என்ற உறுதிமொழியுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).<br>• ஹஜ் பயணிகள் வருகை ஆரம்பம். |
| **27 ஏப்ரல் 2027**<br>(20 துல்க.்.தா 1448H) | • சவூதி சேவை வழங்குநர் நிறுவனத்துடன் இணைந்து முகாம் பரிசோதனை விஜயங்கள் (camp inspection visits) ஆரம்பம். |

**தயவுசெய்து கவனிக்கவும்:**

கீழ்வரும் விடயங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். ஆகையால், தொடர்புடைய அனைத்து தரப்பினரும் அவற்றின் மீது உடனடி கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

1. **முகாம்களைத் முன்பதிவு செய்தல் (Retention of Camps):**

   2026 ஆம் ஆண்டு ஹஜ்ஜிற்காக பதிவு செய்யப்பட்ட முகாம்களை, 2027 ஆம் ஆண்டின் ஹஜ் (1448ர்) பயன்பாட்டிற்காக தக்கவைத்துக் கொள்ளும் நடவடிக்கை, சவுதி சேவை வழங்குநர் நிறுவனத்துடன் முழுமையான சேவைத் தொகுப்பு (Comprehensive Package) தொடர்பான முன்கூட்டிய ஒப்பந்தத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான ஒப்பந்த காலப்பகுதி 2026 ஜூலை 29 ஆம் திகதி தொடக்கம் 2026 ஆகஸ்ட் 13 ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும்.

2. **மருத்துவ சேவை வழங்குநர்களுடன் ஒப்பந்தம் (Medical Service Providers**):

   அங்கீகரிக்கப்பட்ட சவுதி மருத்துவ சேவை வழங்குநருடன் ஒப்பந்தம் மேற்கொள்வது கட்டாயமானதாகும். இதற்கான ஒப்பந்த காலப்பகுதி 2026 ஆகஸ்ட் 14 ஆம் திகதி முதல் 2026 செப்டம்பர் 26 ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும்.

3. **மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பித்தல் (Medical Certificate Requirement):**

   ஒவ்வொரு ஹஜ் யாத்திரிகருக்கும் செல்லுபடியாகும் மருத்துவச் சான்றிதழை சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

4. **ஹத்யி (Hady) ஒப்பந்தம்:**

   ஹத்யி (குர்பானி) ஒப்பந்தமானது பிரத்தியேகமாக ரேளரம ஆயளயச தளத்தின் ஊடாக மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும்.

**எம்.எஸ்.எம். நவாஸ்**
பணிப்பாளர்
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

**ரியாஸ் மிஹுலார்**
தலைவர்
இலங்கை ஹஜ் உம்ரா கமிட்டி


**இலங்கை ஹஜ் உம்ரா கமிட்டி**
**முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**
இல. 180, டீ.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு -10
தொலைபேசி : 011-2667909 / 011-2667901
இணையதளம் : www.muslimaffairs.gov.lk